# பனுவல் பயன்பாட்டு நோக்கில் ஓலைச்சுவடிகள்

# Panuval Payanpaattu Nokkil Olaichuvadigal

**ச.கபிலா அருள்ஞானம்**, முனைவர் பட்ட ஆய்வு மாணவி, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை – 10.

**S.Kabilaarulgnanam**, Ph.D Scholar, Department of Tamil, Thavaththiru Santhalinga Adigalar Arts Science Tamil College, Perur, Coimbatore – 10.

ORCID ID : https://orcid.org/0009-0000-2797-0339

**DOI : 10.5281/zenodo.10004961**

## Abstract

Books mature the human mind and guide it to the right path. They are innumerable. Encompassing innumerable concepts. Books are what make us who read with our heads down, walk upright in the society. Palm leaves were the most widely used stationery used for writing such texts. Looking at the names and patterns written on the metal plaques and barks, it is possible to know that the date palm is very ancient. That is, the bark is cut to the size of leaves and written on with holes AD A 1st century copper plate bearing the shape of leaf also confirms that the use of leaf is very ancient. This article highlights the writing style found on such leaves, the centering of the writings on the leaves, the method of building traces, the external structure of the traces, the period of leaf writing, the status of leaves in social use, and the current status of leaf writing.

## ஆய்வுச் சுருக்கம்:

நூல்கள் மனித மனத்தைப் பக்குவப்படுத்தி நல்வழிக்கு அழைத்துச் செல்வன. அவை எண்ணிலடங்காத. எண்ணிலடங்காத கருத்துகளை உள்ளடக்கித் திகழ்வன. தலைகுனிந்து படிக்கும் நம்மைச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நடக்க வைப்பவை நூல்கள். இத்தகைய நூல்கள் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுதுபொருட்களுள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவை பனையோலைகள். உலோகங்களில் எழுதப்பட்ட பட்டயங்கள், மரப்பட்டைகள் ஆகியவற்றைக் குறிப்பிடும் பெயர்களையும் வடிவங்களையும் நோக்கும் பொழுது பனையோலையே காலத்தால் மிகவும் பழமையானது என அறியமுடிகிறது. அதாவது ஓலைகளின் அளவுகளிலேயே மரப்பட்டைகள் வெட்டப்பட்டு, துளையிட்டு எழுதப்பட்டதையும் கி.பி. முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த தாமிரப் பட்டயம் ஓலையின் வடிவத்தைக் கொண்டிருப்பதையும் காணும்போது ஓலையின் பயன்பாடு மிகவும் பழமையானது என்பதை உறுதிசெய்யமுடிகிறது. இத்தகைய ஓலைகளில் அமைந்துள்ள எழுத்தமைவு, ஓலைகளின் எழுத்துகளுக்கு மையிடுதல், சுவடி கட்டும் முறை, சுவடிகளின் புற அமைப்பு முறை, ஓலை எழுதும் காலம், சமூகப் பயன்பாட்டில் ஓலைகளின்

நிலை, ஓலை எழுதுதலின் இன்றைய நிலை ஆகியவற்றை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

**Keywords :** பனை, பனையோலை, சுவடிகள், எழுத்துகள், ஓலைகள், நூல்கள்

**முன்னுரை**

மொழி என்பது கருத்தைப் பரிமாறிக்கொள்ள உதவும் கருவி ஆகும். இம்மொழி தோன்றி வளரத் தலைப்படும்போது எண்ணற்ற இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் தோன்றி அம்மொழிக்கு வளம் சேர்க்கின்றன. அவ்வகையில் தோன்றிய நூல்களில் எழுத்துகளை எழுதுவதற்குரிய ஏடுகளாகத் தொடக்கக் காலத்தில் விளங்கியவை பனையோலைகள். சுவடிகளாகக் கிடைக்கப்பெற்ற பல பனையோலைகள், பதிப்பாக்கம் பெற்ற நிலையில் அவை நூல்களாக மறுமலர்ச்சி அடைந்து மனிதனின் அறிவை விரிவடையச் செய்தன. அவ்வகையில் ஓலைகள் சுவடிகளாகப் பயன்பட்ட பாங்கை விளக்கிக் கூறும் நோக்கில் பனுவல் பயன்பாட்டு நோக்கில் பனையோலைகள் எனும் இக்கட்டுரை அமைகிறது.

**ஓலையில் எழுத்தமைவு:**

எழுதுவதற்கேற்ப ஓலை பதமாக இருக்கின்றனவா என்றறிய எழுத்தாணியால் ஓலையின் வலது ஓரம் சுழித்துப் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளது. இதனைப் பதம் பார்த்தல் என்பர். சுழிக்க எளிமையாக இருப்பின் ஓலையில் எழுதத் தொடங்குவர். எழுத்தாணி சிக்கினால் ஓலை பதமாக இல்லை என்றறிந்து எழுதுவதற்குகந்த வகையில் மீண்டும் பதப்படுத்துவர். இவ்வாறு "சுழித்து அறியும் முறையே, பிற்காலத்தில் பிள்ளையார் சுழி இடும் வழக்கமானது" **(நல்லுரைக்கோவை – ப.எ – 144)** என்று உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுகிறார்.

எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல், வரி கோணாமல் முற்காலத்தில் எழுதி வந்துள்ளனர். ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக முப்பது நாற்பது வரிகள்கூட எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்துள்ளன. ஓலைகளில் எழுதும் முறையானது இடத்திற்கு இடம் மாறுபட்டமைந்திருக்கின்றது.

"தமிழகத்தில் ஓலை எழுதுபவர்கள் எழுத்தாணியை வலக்கையில் பிடித்துக்கொண்டு இடக்கையில் ஏட்டைப் பிடித்திருப்பார்கள். எழுதும் பொழுது இடக்கை பெருவிரல் நகத்தில் சிறிதளவு பள்ளம் செய்து அந்த இடத்தில் எழுத்தாணியைச் சார்த்திக் கொண்டு எழுதுவார்கள்" என்று உ.வே.சாமிநாதையர் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

**(நான் கண்டதும் கேட்டதும் – ப.எ - 84)**

**மையாடல்:**

வெள்ளோலையில் எழுதப்பெற்ற எழுத்துக்கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் வெள்ளெழுத்தின் மீது மை தடவுதலை மையாடல் என்பர். இம்மையாடல், பூசை அறையில் வைத்திருக்கும் சுவடிகளுக்கு (கம்பராமாயணம், மகாபாரதம், தேவாரம், நாலாயிரத் திவ்வியப்

பிரபந்தம் மற்றும் சமய நூல்கள்) மஞ்சள் அல்லது வசம்பு அரைத்துப் பூசுவதாகவும், படிப்பதற்காக வைத்திருக்கும் சுவடிகளுக்கு மணித்தக்காளிச் சாறு, கோவையிலைச் சாறு, ஊமத்தையிலைச் சாறு ஆகியவற்றில் ஏதாவதொன்றுடன் மாவிலைக்கரி, தர்ப்பைப்புல் கரி, விளக்கெண்ணையில் ஏற்றப்பட்ட விளக்குக் கரி ஆகியவற்றில் ஏதாவதொன்றைச் சேர்த்துத் தடவப்பட்டது. இவ்வாறு எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட ஓலைகளில் பூசும்பொழுது எழுத்துக்கள் மிக நன்றாகத் தெரிவதுடன் பூச்சி மற்றும் பூஞ்சைக் காளான் ஆகியவற்றின் பாதிப்பிலிருந்து சுவடிகள் பாதுகாக்கப்படுகிறன. முற்காலங்களில் வருடத்திற்கு ஒரு முறை மையாடல் செய்யப்பட்டுள்ளது. இவற்றை மையாடல் விழா என்றும் கூறுவர்.

**'ஐயாண்டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்'** **(சீவக சிந்தாமணி – 2701)**

என்று சீவகசிந்தாமணியிலும்,

**"மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்**
**மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்"** **(தமிழ்விடுதூது – கண்ணி எண் – 25)**

எனத் தமிழ்விடு தூதிலும் சுவடிகளுக்கு மஞ்சள் பூசுதல், மையிடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

**கீறலெழுத்தில் வண்ணம் தீட்டுதல்:**

ஓலையில் எழுத்தாணி கொண்டு சித்திரமாக வரைந்து அச்சித்திரங்களுக்கு இயற்கை வண்ணம் ஏற்றுதலே கீறலெழுத்தில் வண்ணம் தீட்டுதல் அல்லது சித்திர எழுத்து என்பர். இன்றும் ஓலையில் இலக்கியங்களைச் சித்திரமாக தீட்டும் வழக்கம் உள்ளது. ஒரிசா மாநிலம் புவனேஸ்வரத்திலிருந்து பூரி நகரம் செல்லும் சாலையில் பூரி நகருக்கு முன் இடது பக்கம் ஐந்து கி.மீ. தூரத்தில் உள்ள ரகுராஜ்பூர் மக்கள் சுவடிகள் எழுதுவதைவிடச் சித்திரச் சுவடிகள் வரைதலையே முதன்மையாகக் கொண்டிருக்கின்றனர். இதிகாசக் கதைகளும் புராணக் கதைகளும் சித்திரங்களாக வரையப்படுகின்றன. பெரிய சித்திரங்கள் இரண்டுக்கும் மேற்பட்ட ஓலைகளை ஒன்றோடொன்று இணைத்து வரையப்படுகிறது. சில சித்திரச் சுவடிகளில் சித்திரங்கள் வரைந்த பின் வண்ணம் தீட்டுகின்றனர். சித்திரச் சுவடிகளில் பெரும்பங்கு ஒரிசாவில் வரையப்பட்டவைகளே எனில் அது மிகையாகாது. தமிழகத்திலும் திண்டுக்கல் மாவட்டத்தில் வாழும் சில மலையின மக்கள் ஓலைகளில் சித்திரம் வரைந்து விற்பனை செய்ததை உ.வே.சா அவர்கள் தனது நூலில் குறிப்பிடுகிறார். (**நல்லுரைக்கோவை – ப.எ.142**). இவற்றைக் காணும்போது அண்மைக் காலம் வரை சித்திரச் சுவடிகளின் புழக்கம் இருந்துவந்தது தெற்றென விளங்குகிறது.

**சுவடி கட்டும் முறை:**

எழுதப்பட்ட ஓலைகளை எளிதாகக் கையாளுவதற்கும் பாதுகாக்கவும் நூல்களால் கட்டி வைக்கப்பட்டன. ஓலைகளைப் பாதுகாப்பாகக் கட்டிவைக்கப் பல்வேறு முறைகளைக் கையாண்டுள்ளனர். ஏடுகளின் நீள அகலங்கள் மற்றும் ஏடுகளின் எண்ணிக்கை கொண்டு இம்முறைகள் அமையும். சுவடிகளைக் கட்டி வைக்க இரண்டு துளையுடைய ஏடுகளில் இடது

பக்கத் துளையின் வழியாக அதிக முறுக்கில்லாத பருத்தி நூல் கயிறு அல்லது பட்டு நூல் கயிறு கொண்டு கோர்த்தும் சுவடிகள் கட்டப்படுகின்றன. இந்தக்கயிற்றின் ஒரு முனையில் நரம்புடன் கூடிய இரட்டை ஓலையைச் சிறிய அளவில் கிளி மூக்கு வடிவில் வெட்டி கட்டி வைக்கப்படுகின்றது. இதைக் 'கிளி மூக்கு' என்பர். சில சுவடிகளில் கிளி மூக்கிற்குப் பதிலாகப் பொத்தான், துவாரம் உள்ள செப்புக்காசு மற்றும் சோழிகள் பயன்படுத்தியுள்ளனர். ஒரே சுவடியில் அதிக ஏடுகள் இருப்பின் அதைக் கையாளும் பொழுது ஓலைகள் கீழே தொங்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவ்வாறு ஓலைகள் கயிற்றில் தொங்கும் பொழுது கயிறு உராய்வதால் துளைகள் சேதம் அடைந்து பெரியதாகும். இந்த வகையான பாதிப்பைத் தவிர்க்க சுமார் ஐம்பது ஏடுகளுக்கு மேல் எழுதப்பட்ட சுவடிகளுக்கு வலதுபுறம் உள்ள துளையில் சுள்ளாணி என்னும் மூங்கில் குச்சியையோ, இரும்புக் கம்பியையோ, செம்புக் கம்பியையோ பயன்படுத்தியுள்ளனர். இதனை 'நாராசம்' என்றழைப்பர்.

இவ்வாறு கட்டி வைக்கப்படும் சுவடிகளில் எழுதப்பட்ட ஏடுகள் சேதமுறா வண்ணம் தொடக்கத்திலும் முடிவிலும் (சுவடி கட்டின் மேலும் கீழும்) சில வெள்ளோலைகள் சுவடி சட்டமாக வைத்துக் காட்டுவது வழக்கமாக கொள்ளப்பட்டது.

சில முக்கியச் சுவடிகளுக்கு உருவம் பொறிக்கப்பட்ட தாமிரத்தகடு அல்லது பித்தளைத் தகடு அல்லது தந்தம் பயன்படுத்தி இருக்கின்றனர். இதுபோன்ற சுவடிகளின் பாதுகாப்பிற்கு மூங்கில் தப்பைகளும், தேக்கு மரச்சட்டங்களும், வேப்பமரச் சட்டங்களும் பயன்படுத்தியுள்ளனர். புராணம் மற்றும் காவிய ஓலைச்சுவடிகளின் சட்டங்களில் பெரும்பாலும் ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டி அழகு படுத்தியிருக்கின்றனர்.

1999 இல் சித்தாமூர் சமண மடத்திலிருந்து தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சேகரித்த ஓலைச்சுவடிகளில் இருந்த ஒரு பலகையில், ஒரு துறவி தனியாகவும் நான்கு துறவிகள் ஒன்றாகப் பத்மாசனமிட்டு அமர்ந்து சரஸ்வதி பீடத்தின் மீதுள்ள சுவடிக் கட்டுகளிலிருந்து ஏட்டை எடுப்பதாக இருப்பதைக் காணமுடிகிறது. அவர்களின் பின்னால் 'அசை' என்று சொல்லப்படும் ஓலைச்சுவடி வைக்கும் 'தூக்கு' வரையப்பட்டுள்ளது என்ற செய்தியை என் சரித்திரம் எனும் நூல் வழி அறிய முடிகிறது. **(என் சரித்திரம் – ப.எ – 55)**

புவனேஸ்வரத்தில் உள்ள ஒரிசா மாநில அருங்காட்சியக சுவடிப் பிரிவில் சுவடிகளை இரு ஓரங்கள் மற்றும் மத்தியில் மட்டும் சுற்றிக் கட்டுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தமிழகச் சுவடி நூலகங்களில் சுவடிகள் மீது ஒரே சீரான அழுத்தம் இருக்க 'டயமண்ட் கட்டு' எனப்படும் சாய்சதுரக் கட்டுகள் கட்டப்படுகின்றன.

இலங்கையில், ஓலைச்சுவடிகள் பழங்காலத்திலிருந்து மெல்லிய கயிற்றால் இடது புறமிருந்து இரண்டு நுனிகளிலும், மத்தியில் ஐந்து சுற்றுகளும் வலது பக்கம் மூன்று சுற்றுகளும் சுற்றப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. கடிதச் சுவடிகள் யாருக்கு அனுப்பப்படுகிறது என்பதை ஓலைச் சுவடிகளைக் கட்டும் முறையிலிருந்து அறியலாம். அதாவது, தகவல் சுவடியில் ஒரு சுற்று சுற்றியிருந்தால் அது எதிரிக்கும், இரண்டு சுற்று சுற்றியிருந்தால் அது நண்பனுக்கும், மூன்று சுற்று சுற்றிருந்தால் அது உறவினர்க்கும், நான்கு

சுற்று சுற்றியிருந்தால் அது குடும்ப நபருக்கும், ஐந்து சுற்று சுற்றியிருந்தால் அது தாய்தந்தையர் அல்லது சகோதரர்களுக்கும், ஆறு சுற்று சுற்றியிருந்தால் அது அரசனுக்கும் கொடுக்க வேண்டும் என்பது மரபு என உ.வே.சா அவர்கள் தனது நூலில் குறிப்பிடுகிறார். (**நல்லுரைக்கோவை - ப.எ – 142**)

**ஓலைச் சுவடிகளின் புற அமைப்பு:**

ஓலைச் சுவடிகளின் புற அமைப்பானது அளவில் சிறியது, பெரியது என்று மட்டுமில்லாமல் வெவ்வேறு வடிவங்களிலும் ஓலைகளை வெட்டிச் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன. சிறிய நூல்கள், அடிக்கடி கையில் எடுத்துச் செல்லக்கூடிய சுவடிகளைச் சிறிய ஓலைகளிலும் காவியம், காப்பியம், புராணம் மற்றும் பெரிய இலக்கியங்களைப் பெரிய ஓலைகளிலும் (நீள, அகலங்கள் கூடுதலாகவும் அதிக எண்ணிக்கை கொண்டதாகவும் உள்ளவை) எழுதியிருக்கின்றனர். தமிழகத்தில் கிடைக்கக் கூடிய கோவில் கணக்குகள் மற்றும் நில விவரம், வருவாய்த்துறைக் கணக்குகள் எழுதுவதற்குப் பனைமரத்திலிருந்து கிடைக்கும் ஓலைகளின் ஈர்க்கை மட்டும் எடுத்துவிட்டு மீதம் உள்ள ஓலையை முழுவதும் அப்படியே பயன்படுத்தி எழுதியுள்ளனர்.

இலக்கியச் சுவடிகள் எழுதப்பட்ட ஓலைகள் சுருள் போன்றும், உருண்டையான கழிகள் போன்றும், சிவலிங்கம், உத்திராட்சை மாலை போன்றும், மீன், ஆமை, விசிறி, பம்பரம், நண்டு, கிளி போன்றும் பல்வேறு விதமான வடிவங்களில் நறுக்கிச் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன. இன்றும் இதுபோன்ற சுவடிகள் ஒரிசா மாநில அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் குடும்பத்தில் கலைமகள் வடிவச் சிற்பம் போலவே சுவடிக்கட்டு ஒன்று பூசை அறையில் இருந்ததாகக் கூறுவர்.

**ஓலைகளில் எழுதும் காலம்:**

வருடத்தின் அனைத்து நாட்களிலும் ஓலைச்சுவடிகள் கல்வி கற்பதற்கும் எழுதினாலும் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் சுவடிகள் அதிகமாக எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கல்வி கற்பதற்குக் காலமில்லை, நேரமில்லை என்றாலும் தனிப்பட்டவரின் சூழல், தட்பவெப்பநிலையைக் கொண்டு கல்வி கற்கும் காலமானது மாறுபட்டுள்ளது. சுவடிகள் சிலவற்றில் காணப்படும் முற்குறிப்பு மற்றும் பிற்குறிப்புச் செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது சுவடிகள் எழுதுவதற்கென்றே குறிப்பிட்ட சில மாதங்கள் ஒதுக்கப்பட்ட காரணத்தைக் காணமுடிகிறது. குறிப்பாக ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் தமிழகத்தின் மழைக் காலமாக இருப்பதால் துறவிகள் மற்றும் கல்வியாளர்கள் ஓரிடத்தே தங்கியிருந்து கல்வி கேள்விகளில் காலத்தைச் செலவிடுவார்கள். தொடர் பயணங்களுக்கு இம்மாதங்கள் இடையூறாக இருப்பதே காரணம் என்பதால் ஆடி அமாவாசை தொடங்கி ஐப்பசி வரை 'சதுர் மாதம்' எனப்படும் விரதம் அந்தணர்களாலும், துறவிகளாலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆவணி அமாவாசையன்று வியாச பூசை செய்து வேதங்கள் படிக்கும் வழக்கம் இன்றுவரை தொடர்வதைக் காணமுடிகிறது.

**சமுதாயப் பயன்பாட்டில் ஓலைகள்:**

தென்னிந்தியாவில் ஓலைகள் கலை, இலக்கியம், சமயம் மற்றும் வரலாற்றுச் செய்திகளை எழுதிப் பாதுகாப்பதற்கு மட்டுமின்றி, மக்களின் பழக்க வழக்கங்களிலும் தகவல் பரிமாற்றத்திலும் முக்கிய காணலாம். அரசர் கூறும் இடம்பெற்றிருப்பதை இன்றளவும் காணலாம். செய்தியை ஓலையில் எழுதுபவர் திருமந்திர ஓலை என்றும், அவர்களின் தலைவர் 'திருமந்திர ஓலைநாயகம்' என்றும் அழைக்கப்பட்டனர். “அரசரின் செயல் நடவடிக்கைகளை எழுதுபவர் பட்டோலை என்றும், கணக்கெடுப்பவரை ஓலைக் கணக்கர் என்றும், ஊர் நடவடிக்கைகளை அறிவிப்பவரை 'நீட்டோலை' என்றும் அழைத்தனர்”

சோழ மன்னர்களின் ஆட்சியில் ஓலைகளைத் தேர்தல் முறைக்குப் பயன்படுத்தியுள்ளனர். அம்முறையைக் 'குடவோலை'என்றழைத்தனர்.
இதை அகனாநூற்றின்,

**“குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழக்**
**கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்”** **(அகம் – 77- பா.அ – 6-7)**

என வரும் பாடலடிகள் உறுதிசெய்கின்றன. கடன் மற்றும் ஒப்பந்தம் பற்றி எழுதப்பட்ட ஓலையை ஆவண ஓலை என்றும், முதல் ஓலையை மூல ஓலை என்றும், பிரதி ஓலையைப் படி ஓலை என்றும், ஆவண ஓலைகள் வைத்துப் பாதுகாக்கப்பட்ட இடம் ஆவணக்களரி என்றும் குறிப்பிட்டனர்.

ஆவண ஓலைகளின் பயன்பாட்டைப் பற்றிப் பல புராண, இதிகாசக் குறிப்புகள் கிடைக்கின்றன. உதாரணமாக, பெரியபுராணத்தின் தடுத்தாட்கொண்ட புராணத்தில்,

**“வேதியன் அதனைக் கேட்டு வெண்ணெய் நல்லூரிலே நீ**
**போதினும் நன்றுமற்றுஅப் புனிதநான் மறையோர் முன்னர்**
**ஆதியில் மூல ஓலை காட்டி நீ அடிமை ஆதல்**
**சாதிப்பன் என்று முன்னே தண்டுமுன் தாங்கிச் சென்றான்”**

**(பெரிய புராணம் – பா.எ - 195)**

என வரும் இப்பாடலின் வழி, சிவபெருமான் வயது முதிர்ந்த வேதியர் உருவம் கொண்டு சுந்தரர் திருமணத்தைத் தடுத்து நிறுத்துவதற்குச் சுந்தரரின் முன்னோர்கள் எழுதிக் கொடுத்ததாகக் காட்டும் அடிமை சாசன ஓலையைச் சுந்தரர் கிழித்தவுடன் அது படி ஓலைதான் அதுபோன்ற படி ஓலைகள் என்னிடம் பல உள்ளன. மூல ஓலை திருவெண்ணெய்நல்லூர் ஆவணக்களரியில் உள்ளது என்று கூறிய நிகழ்விலிருந்து நாம் ஆவணக்களரி இருந்ததை அறியமுடிகிறது.

இன்று நாம் காகிதங்களைப் பயன்படுத்தி வந்தாலும் தமது பழக்க வழக்கங்களில் அன்றாடம் நடைபெறும் தகவல் பரிமாற்றத்தில் ஓலை என்ற சொல் வழக்கத்தில் உள்ளதைக்

காணமுடிகிறது. உதாரணமாக ஒருவரை அழைக்கும் செய்தியைக் கூறுவதற்கு ஓலை வந்துள்ளது என்றும், திருமணம் நிச்சயிக்கும் நிகழ்வினை முகூர்த்த ஓலை என்றும், திருமணச் செய்தி அறிவிப்பதை மணவோலை என்றும், இறந்த செய்தி அறிவிப்பதை சாவோலை என்றும் கூறுவதைக் காணலாம். இதுபோன்றே அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, தூதுஓலை போன்ற சொற்கள் பயன்பாட்டில் இருந்ததை அறியமுடிகிறது.

ஓலைகள் எழுதுவதற்கு மட்டுமின்றி பல்வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளனர். ஓலையால் வேய்ந்த குடிசையை ஓலைக்குடிசை என்றும், தாள்பாளை ஓலையால் செய்யப்பட்ட குடையைத் தாளங்குடை என்றும் அழைக்கப்படுவதைக் குறிப்பிடலாம்.

கிராமங்களில் வயதான பெண்கள், ஆடவர், ஓலையைச் சுற்றிக் காதணியாக அணிந்திருந்தனர். இதனைக் காதோலை என்றனர். இன்றைய தோடு என்னும் அணி காதோலையின் எச்சம் என்று குறிப்பிடப்படுகின்றது. இன்றும் கிராமங்களில் பொங்கல் நாட்களில் மூதாதையர்களை நினைத்து வணங்கும் பொழுது மறவாமல் காதோலை கருகுமணி வைப்பது வழக்கமாக உள்ளது. அதேபோல் ஆடிப்பெருக்கு கொண்டாடும்போதும் காதோலை கருகுமணி வைத்துப் படைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. இதன் மூலம் ஓலைகளின் பயன்பாடு இன்றும் நம் சமூகத்தைவிட்டு நீங்கவில்லை என்பதை அறியமுடிகிறது.

**ஓலை எழுதுதலின் இன்றைய நிலை:**

இந்தியாவின் தென்பகுதியிலும் கிழக்காசிய நாடுகளிலும், ஓலைகளில் அதிகமாக எழுதியுள்ளனர். இருந்தாலும் காலத்தின் வளர்ச்சி, எளிதான வாழ்க்கை, இதர நாடுகளின் கலாச்சார ஆதிக்கம். உலகெங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய காகிதம் போன்றவற்றின் பயன்பாடுகளால் ஓலைகளின் பயன்பாடு குறைந்தது எனலாம். தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம் வரை ஓலைகளில் எழுதப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை கிரயம், தானம், பாகப்பிரிவு பத்திரம், ஒற்றி, உடன்படிக்கை போன்ற அனைத்தும் ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. மேலும் ஓலைகளில் எழுதுவதற்கு புலவர்கள் மட்டுமின்றி பல்வேறு தற்காலிக எழுத்தர், நிரந்தர எழுத்தர் என இருந்ததாக அறியமுடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அச்சிட்டு வெளிவந்த சில நூல்களைப் பாதுகாப்பு கருதி மீண்டும் ஓலையில் எழுதி வைக்கப்பட்டிருப்பதையும் அறியமுடிகிறது.

**முடிவுகள்**

எழுத்துகளை எழுதுவதற்குப் பெரும்பாலும் பனையோலை பயன்படுத்தப்பட்டு இருப்பதை அறிய முடிகிறது. எழுத்துகள் தெளிவாகத் தெரிவதற்காகப் பனையோலையில் மையும் வண்ணமும் தீட்டியுள்ளனர் என்பது பெறப்பட்டது. ஓலையில் எழுவதற்கெனக் குறிப்பிட்ட காலம் கணித்து அந்நேரத்தில் எழுதியுள்ளமையை அறியமுடிகிறது. இன்றும் பாதுகாப்பு கருதி நூல்களில் உள்ளதை ஓலையில் எழுதும் வழக்கம் இருப்பதை அறியமுடிகிறது. பனையோலைகளின் பயன்பாடு அதிகளவில் இருந்தாலும்

அவற்றில் குறிப்பிடத்தக்கப் பயன்பாடாகவும் சமுதாயத்திற்குப் பெருமளவில் பயனளிக்கும் பயன்பாடாக அமைந்ததும் ஓலைச்சுவடிகளாக அவை பயன்படுத்தப்பட்டபோது என்ற செய்தியை இவ்வாய்வுக் கட்டுரை உறுதி செய்கிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. உ.வே.சாமிநாதையர் – என் சரித்திரம் – சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1994.
2. உ.வே.சாமிநாதையர் – நல்லுரைக்கோவை – சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1994.
3. உ.வே.சாமிநாதையர் – நான் கண்டதும் கேட்டதும் – சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2014.
4. திருத்தக்க தேவர் – சீவக சிந்தாமணி – மறுதோன்றி அச்சு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986
5. சேக்கிழார் – பெரியபுராணம் – கங்கை புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 17, 1999
6. அகநானூறு மூலமும் உரையும் – சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
7. தமிழ்விடுதூது மூலமும் உரையும் - சாரதா பதிப்பகம், சென்னை, 2012.


**References:**


1. U.V.Saminathaiyar - En Sarithiram – Saminathaiyar Nool Nilaiyam, Chennai, 1994
2. U.V.Saminathaiyar - Nalluraikovai – Saminathaiyar Nool Nilaiyam, Chennai, 1994
3. U.V.Saminathaiyar - Nan Kandathum Kettathum – Saminathaiyar Nool Nilaiyam, Chennai, 2014
4. Thiruththakkathevar – Seevakasinthamani – Maruthonri Achchu, Tamil University, Thanjavur, 1986
5. Sekkizhar – Periyapuranam – Kangai Puththaga Nilaiyam, 13, Dheenathayalu Street, Thiyagaraja nagar, Chennai-17, 1999
6. Akananooru Moolamum Uraiyum – Saradha Pathippagam, Chennai, 2010
7. Tamil Vidu Thoothu Moolamum Uraiyum - Saradha Pathippagam, Chennai, 2012

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**கபிலா அருள்ஞானம். ச " பனுவல் பயன்பாட்டு நோக்கில் ஓலைச்சுவடிகள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 4, அக்டோபர் 2023, பக். 9-17

**Cite this Article in English**

**Kabilaarulgnanam.S "Panuval Payanpaattu Nokkil Olaichuvadigal"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 4, October 2023, pp. 9-17